**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>
<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் ஏப்ரல் திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை</u>

**<u>அ.வ.எண்.55/2016 இல் இ.ம.எண்.364/2017 இல் இ.ம.எண்.02/2019</u>**

1.கோவிந்தராஜ்
2.முத்துசாமி ... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

1.பாபு
2.வெங்கடேஷ் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 21.03.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சொத்து விபரத்தில் விடுபட்டு போன நத்தம் க.ச.நெ.89/B2 எண்ணை சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VI விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>

மனுதாரர் அசல் வழக்கின் 1ம் வாதி. 2ம் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாகவும் மனுவினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற்றுள்ளனர். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரத்தை மதிக்காமல் மேற்படி உத்தரவினை மீறியுள்ளதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஜப்தி செய்யக்கோரி இ.ம.எண்.364/2017 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஜப்தி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற உத்தரவின்படி ஜப்தி கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள வில்லங்க பதிவேட்டில் பதிவு செய்ய நீதிமன்ற அமீனா சென்றபோது சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண் எதுவும் இல்லாததால் பதிவு செய்ய முடியாது என திரும்ப அனுப்பப்பட்டது. இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் நத்தம் க.ச.89/B2 முன்பு 89/2 என்று சேர்க்கப்படாமல் விடுபட்டு போய்விட்டது. எனவே க.ச.89/2 என்ற விபரத்தை சொத்து விபரத்தில் சேர்த்து திருத்தம் செய்ய அனுமதிக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவினை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :

மனுதாரர்கள் / வாதிகளின் மனு பொய்யும், மோசடியானது என்பதால்

சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / வாதிகளே நிரூபிக்க வேண்டும். இ.ம.எண்.364/2017 மனுவில் கண்டுள்ள சொத்துவிபரங்கள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு உரியவைதானா, அவை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டவைதானா என்பது குறித்த எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தை ஏமாற்றி நீதிமன்ற கட்டளைகளை தவறான வழியில் துஷ்பிரயோகம் செய்து தவறான சொத்து விபரத்தின் பெயரில் மனுதாரர்கள் / வாதிகள் நீதிமன்ற அமீனா மூலம் திப்பம்பட்டி கிராமத்தின் பல இடங்களில் டாம்டாம் அடித்து எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக பிரகடனப்படுத்தி எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளனர். அதனால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மான நஷ்ட வழக்கு தொடர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடங்களை ஆக்கிரமித்து மனுதாரர்கள் / வாதிகள் கட்டிடம் கட்டியதை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தடுத்துள்ளனர். மேற்படி செயல் நீதிமன்ற அவமதிப்பு குற்றமல்ல. மேற்படி இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எந்த தேதியிலும் நீதிமன்ற உத்தரவினை அவமதிப்பு செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மீது மனுதாரர்கள் / வாதிகள் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக பொய்யாக மனுதாக்கல் செய்து ஜப்தி உத்தரவினை பெற்றள்ளனர். நிலுவையில் இல்லாத மனுவின் மீது தாக்கல் செய்யும் திருத்தல் மனு முற்றிலும் ஏற்புடையதல்ல. உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மனுவில் மீண்டும் திருத்தம் செய்ய இயலாது. திருத்தல் மனுவில் கண்டுள்ள க.ச.89/B2

காலைக்கும் இ.ம.எண்.364/2017 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரங்களுக்கும், எல்லைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) இம்மனுவானது மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சொத்து விபரத்தில் விடுபட்டு போன நத்தம் க.ச.நெ.89/B2 எண்ணை சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரையும் கேட்கப்பட்டது.

7) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.182/2016 என்ற எண்ணில் மனுவினை தாக்கல் செய்து மேற்படி மனுவில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரத்தை மதிக்காமல் மேற்படி உத்தரவினை மீறி எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் செயல்பட்ட காரணத்தால் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஜப்தி செய்யக் கோரி இ.ம.எண்.364/2017 மனுவானது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது

24.10.2018ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற அமீனா பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று ஜப்தி உத்தரவினை பதிவு செய்யக் கோரிய போது சொத்து விபரத்தில் சர்வே எண் இல்லாததால் பதிவு செய்ய இயலாது என்று சார்பதிவாளர் நிராகரித்து விட்டதாகவும், இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண் குறிப்பிடாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினைப் பொறுத்து ஜப்தி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வே எண் குறிப்பிடாத காரணத்தால் மட்டுமே மேற்படி ஜப்தி உத்தரவு செல்லத்தக்கதல்ல என்பதால் அதன் காரணமாக இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண்ணை சேர்க்கும் பொருட்டு மனுவினை திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முடிக்கப்பட்ட இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், முடித்து வைக்கப்பட்டுள்ள மனுவினை திருத்தம் செய்வதற்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்க முடியாது என்ற நிலையில் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

9) இரு தரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையிலிருந்தும், அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.182/2016 என்ற எண்ணில் மனுவினை தாக்கல் செய்து மேற்படி மனுவானது 19.09.2018ம் தேதியில்

அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இ.ம.எண்.182/2016 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால உத்தரவினை மதிக்காமல் அதனை மீறி எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் செயல்பட்டுள்ள காரணத்தால் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஜப்தி செய்யக்கோரி இ.ம.எண்.364/2017 மனுவினை மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்திருந்த நிலையில் மேற்படி மனுவானது முறையான விசாரணைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்ய 24.10.2018 ம் தேதியில் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

10) மேற்படி உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற அமீனா அதனை பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்றில் பதிவேற்றம் செய்ய சென்றபோது மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண்கள் குறிப்பிடாத காரணத்தால் பதிவு செய்ய முடியாது என்று சார்பதிவாளர் அலுவலகத்தில் கூறியுள்ளதாக மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

11) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் இ.ம.எண்.364/2017 மனுவில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஜப்தி செய்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் அதில் சர்வே எண் குறிப்பிடாத காரணத்தால் மேற்படி ஜப்தி செய்யப்பட்டுள்ள விபரத்தை பொள்ளாச்சி சார்பதிவாளர் வில்லங்க சான்றில் பதிவேற்றம் செய்ய முடியாமல் உள்ளதால் முடித்து வைக்கப்பட்டுள்ள இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண்ணை சேர்த்து கொண்டு திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

12) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.364/2017 மனுவானது முடித்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொறுத்து திருத்தம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி

ஏற்கத்தக்கதல்ல என்றும், பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

13) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது.

14) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளதை பரிசீலிக்கும் போது இ.ம.எண்.364/2017 மனுவில் குறிப்பிடப்பட்டு ஜப்தி செய்யப்பட்டுள்ள சொத்து எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது தான் என்பது தெரிய வருகிறது. இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ள போதிலும் மேற்படி உத்தரவிற்கு எதிராக தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாத நிலையில் மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் மட்டுமே இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு நிலைநிற்கத்தக்கதல்ல என்று முடிவிற்கு வர இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) இ.ம.எண்.364/2017 மனுவானது உபயதரப்பினருக்கும் முறையான வாய்ப்பளித்த பின்னரே அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி

உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் அது பற்றிய பதிவுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்று தெரிய வருகிறது.

16) இ.ம.எண்.364/2017 மனுவினை பரிசீலிக்கும் போது மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண் குறிப்பிடாமல் உள்ளதாக தெரிய வருகிறது. சர்வே எண் குறிப்பிடப்படாத காரணத்தினால் மட்டும் இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஜப்தி உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று கருத இயலாது. இ.ம.எண்.364/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு முழுமை அடையும் பொருட்டு இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் சர்வே எண்ணை குறிப்பிடவேண்டியது அவசியமாக உள்ளது என்று தெரிய வரும் நிலையில் நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

17) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள் / வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் விடுபட்டு போன நத்தம் க.ச.நெ.89/B2 எண்ணை சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.04.08 16:36:58 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

**– இல்லை –**

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**– இல்லை. –**

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.04.08 16:37:07 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

--------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.55/2016

இல்

இ.ம.எண்.364/2017

இல்

இ.ம.எண்.02/2019

நாள் : 08.04.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

--------------------------------